www.freetnbooks.com

Tsi11T

தென்காசி மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2025

10-12-2025

வகுப்பு 11

பொதுத்தமிழ்

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 90

**குறிப்பு:** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி - I

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **14×1=14**

1) அதிசய மலரின் புன்னகை உணர்த்துவது
   அ) நம்பிக்கை ஆ) பெருமிதம் இ) புகழ் ஈ) அச்சம்
2) மொழிதான் ஒரு கவிஞரை நிகழ்காலத்தவரா அல்லது இறந்த காலத்தவரா என்று நிர்ணயிக்கிறது எனக் கூறியவர்
   அ) வால்ட் விட்மன் ஆ) எர்னஸ்ட் காசிரர்
   இ) ஆற்றூர் ரவிவர்மா ஈ) பாப்லோ நெரூடா
3) மண்ணுக்கு வளம் சேர்ப்பன
   அ) மண்புழு ஆ) காடு
   இ) இயற்கை உரங்கள் ஈ) இவை அனைத்தும்
4) ஒப்புரவு என்பதன் பொருள்
   அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது
   இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது
5) புரட்சி கவிஞர் என அழைக்கப்படுபவர்
   அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) நாமக்கல் கவிஞர் ஈ) கண்ணதாசன்
6) வாடிவாசல் எனும் குறும்புதினத்தை எழுதியவர் யார்?
   அ) சி.சு.செல்லப்பா ஆ) வாணிதாசன் இ) கவிமணி ஈ) பாரதியார்
7) **கூற்று** : கோடு என்பது தமிழ்ச்சொல் ஆகும்.
   **விளக்கம்** : கோடு எனும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்ற பொருள்களும் உண்டு.
   அ) கூற்று சரி; விளக்கம் தவறு. ஆ) கூற்றும் சரி; விளக்கமும் சரி.
   இ) கூற்று தவறு; விளக்கம் சரி. ஈ) கூற்று தவறு; விளக்கமும் தவறு.
8) விடையைக் கண்டேன் என்றுரைத்தாய் - ஒரு
   வினாவால் நீயே நிற்கின்றாய் என்று உரைப்பவர்
   அ) பிரமிள் ஆ) அழகிய பெரியவன்
   இ) அப்துல் ரகுமான் ஈ) இரா. மீனாட்சி
9) **சரியான தொடரைத் தெரிவு செய்க:**
   அ) நான் எழுதுவதோடு இன்று இலக்கிய மேடைகளிலும் இதழ்களில் பேசுகிறேன்.
   ஆ) இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளிலும் பேசுகிறேன்.
   இ) இலக்கிய மேடைகளில் இன்று எழுதுவதோடு நான் இதழ்களில் பேசுகிறேன்.
   ஈ) இதழ்களில் பேசுகிறேன் நான் இன்று இலக்கிய மேடைகளிலும் எழுதுவதோடு.
10) பதிற்றுப்பத்து எந்த மன்னர்களைப் பற்றி பேசுகிறது?
   அ) சேரர் ஆ) சோழர் இ) பாண்டியர் ஈ) பல்லவர்
11) அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன் யார்-யாரிடம் கூறியது?
   அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம்
   இ) அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்
12) **பொருத்துக:**

| | | |
|---|---|---|
| அ) அடி அகரம் ஐ ஆதல் | - | 1. செங்கதிர் |
| ஆ) முன்நின்ற மெய் திரிதல் | - | 2. பெருங்கொடை |
| இ) ஆதிநீடல் | - | 3. பைங்கூழ் |
| ஈ) இனமிகல் | - | 4. காரிருள் |

   அ) 4, 3, 1, 2 ஆ) 3, 1, 4, 2 இ) 2, 3, 1, 4 ஈ) 2, 1, 3, 4

www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com



13) பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?

அ) பகுதி, இடைநிலை, சாரியை

ஆ) பகுதி, விகுதி, சாரியை, இடைநிலை

இ) பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை

ஈ) பகுதி, விகுதி

14) **சரியானதைத் தேர்ந்தெடுக்க:**

அ) வரை - மலை

ஆ) வதுவை - திருமணம்

இ) வாரணம் - யானை

ஈ) புடவி - கடல்

அ) அ, ஆ, இ - சரி; ஈ - தவறு

ஆ) ஆ, இ, ஈ - சரி; அ - தவறு

இ) அ, இ, ஈ - சரி; ஆ - தவறு

ஈ) அ, ஆ, ஈ - சரி; இ - தவறு

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக:** **3×2=6**

15) ''நீளும் கைகளில் தோழமை தொடரும் - நீளாத கைகளில் நெஞ்சம் படரும்'' - தொடை நயங்களை எடுத்தெழுதுக.

16) மருந்து எது? மருந்து மரமாக இருப்பவர் யார்?

17) காவடிச்சிந்து என்பது யாது?

18) மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் எனும் கூற்றினை உறுதிப்படுத்துக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக:** **2×2=4**

19) தமிழ்நாட்டின் மாநில மரம் - சிறுகுறிப்பு வரைக.

20) சங்ககாலத்தில் தமிழ்மொழியின் நிலை பற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது?

21) 'நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்' எனும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **7×2=14**

22) கலைச்சொல்லாக்கம் பொருள் தருக.

23) **தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக:**
பள்ளிக்கூடம் எல்லாம் தருபவை ஒவ்வொரு கலைகள் குழந்தையும் போக வேண்டும் மகிழ்ச்சி.

24) **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:**
(i) வலி, வளி, வழி **(அல்லது)** (ii) குரை, குறை

25) **பகுபத உறுப்பிலக்கணம் தருக: (ஏதேனும் ஒன்று)**
(i) வருகின்ற (ii) ஆழ்க

26) **இலக்கணக்குறிப்பு தருக: (ஏதேனும் ஒன்று)**
(i) உடை அணிந்தேன் (i) துய்த்தல்

27) **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:**
தமிழர் ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய் வெட்டிப்பாசனம் செய்தனர்.

28) **விடுபட்ட இடத்தில் அடுத்து வரவேண்டிய சொற்களைக் கண்டறிந்து எழுதுக:**
எழுத்து, ............, சீர், தளை, ........... தொடை.

29) i) **கண்ணிலும்** எழுதலாம்; வெண்தாளிலும் எழுதலாம்.
ii) பூவின் உறுப்பும் நானே; புன்னகையின் பிறப்பிடமும் நானே.
**(கம்பு, மை, இதழ்)**

30) **மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக:**
மதில் மேல் பூனை

www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com



## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி:** 2×4=8

31) தமிழ்ப் பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.

32) க. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?

33) சேரநாடு செல்வவளம் மிக்கது என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.

34) அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாகத் தமிழ்நதி கூறுகிறார்?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக:** 2×4=8

35) வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.

36) தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.

37) திராவிடப் பழங்குடிகளின் இனக்குழு பெயர்களுக்கும் மலைக்கும் உள்ள தொடர்பிற்கு எடுத்துக்காட்டு தருக.

38) ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:** 3×4=12

39) தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு - **இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.**

**(அல்லது)**

உருவக அணிக்குத் திருக்குறள் ஒன்றை எடுத்துக்காட்டாகத் தந்து விளக்குக.

40) **இலக்கிய நயம் பாராட்டுக:**
**(மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுது)**

சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகம் தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?
பதம்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்
பார்த்தால் அதைவிடக் கீழன்றோ?
இதம்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
எல்லாம் சுதந்திரம் இருந்தால்தான்
நிதம்தரும் துயர்களை நிமிர்ந்து நின்றெதிர்த்திட
நிச்சயம் சுதந்திரம் அது வேண்டும்

**- நாமக்கல் கவிஞர்**

41) அ) குறிஞ்சித் திணையைச் சான்று தந்து விளக்குக.

**(அல்லது)**

ஆ) செந்துறைப் பாடாண்பாட்டுத் துறையைச் சான்றுடன் பொருத்துக.

41) **செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.**
**பத்தியினைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்:**

நாடகத் தமிழை வளர்த்த நல்லறிஞராய்த் திகழ்ந்த சங்கரதாசு சுவாமிகள் நாடகங்களை உருவாக்கிய ஆசிரியர்களுக்கெல்லாம் முன்னோடியாகவும் முதல்வராகவும் விளங்கினார்., பெரும்புலவர்கள் சுவாமிகளின் பாடல் திறத்தையும் உரையாடல் தரத்தையும் உணர்ந்து நெஞ்சாரப் பாராட்டியுள்ளனர். சங்கரதாசு சுவாமிகள் 'சமரச சன்மார்க்க சபை' எனும் நாடகக் குழுவை உருவாக்கினார். இந்த குழுவில் பயிற்சி பெற்ற எஸ்.ஜி. கிட்டப்பா நாடகக் கலைத்துறையில் பெரும்புகழ் ஈட்டினார். மேடை நாடகம் குன்றிய நிலையில் மதுரை வந்த சுவாமிகள் 1918ல் 'தத்துவ மீனலோசினி வித்துவ பால சபை' எனும் நாடக அமைப்பை உருவாக்கி ஆசிரியர் பொறுப்பேற்றார். நாடகத்தின் மூலம் தமிழின் பெருமையையும் பண்பாட்டையும் தம் சுவைமிகுந்த பாடல், உரையாடல் வழியே உணர்த்திய சங்கரதாசு சுவாமிகளை நாடகத்துறைக் கலைஞர்கள் தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர் என்று உளமகிழ்ந்து போற்றுகின்றனர்.

www.freetnbooks.com | FREETNBOOKS

**வினாக்கள்:**

1. நாடகங்களை உருவாக்கிய ஆசிரியர்களுக்கெல்லாம் முன்னோடியாகவும் முதல்வராகவும் விளங்கியவர் யார்?
2. சங்கரதாசு சுவாமிகள் எந்த நாடகக்குழுவை உருவாக்கினார்?
3. 1918ல் எந்த நாடக அமைப்பை உருவாக்கினார்?
4. நாடகத்துறை கலைஞரின் சங்கரதாசு சுவாமிகளை எவ்வாறு போற்றினார்?

42) **பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக:**

யானைக்கும் அடிசறுக்கும் **(அல்லது)**

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

43) **தமிழாக்கம் தருக:**

1. Looking at beauty in the world is the first step of purifying the mind.
2. Roads were made for journeys not destination.
3. Work while you work and play while you play.
4. Culture does not make people make culture.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக:** **3×6=18**

44) அ) வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரையாக்குக.

**(அல்லது)**

ஆ) 'மதீனா நகரம் ஒரு வளமான நகரம்' என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

45) அ) பௌத்தக் கல்வி, சமணக் கல்வி, மரபுவழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) சுந்தர ராமசாமியின் 'காற்றில் கலந்த பேரோசை' எனும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.

46) அ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) நர்த்தகி நடராஜனின் நேர்காணல் வழி அறிந்தவற்றைத் தொகுத்து கட்டுரை எழுதுக.

## பகுதி - V

**அடிபிறழாமல் எழுதுக:** **4+2=6**

47) அ) சிற்றூரும் வரப்பெடுத்த ........... எனத் தொடங்கும் புரட்சிக்கவி பாடல்.

ஆ) செயல் என முடியும் திருக்குறளை எழுது.

----------

www.freetnbooks.com | FREETNBOOKS